# நைஜீரியா கூட்டாட்சி குடியரசு அதிபருடன் பிரதமர் மோடி சந்திப்பு

செப்டம்பர் 10, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி 10 செப்டம்பர் 2023 அன்று புது தில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சிமாநாட்டின் இடையே நைஜீரியா கூட்டாட்சி குடியரசின் அதிபர் திரு. போலா அகமது டினுபுவை சந்தித்தார்.

இந்தியாவின் ஜி20 தலைமையின் வெற்றிக்கு அதிபர் டினுபு பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்தார். ஜி20இல் ஆப்பிரிக்க ஒன்றியத்தின் நிரந்தர உறுப்பினர் இடத்தை உறுதி செய்ததற்காகவும், உலகளாவிய தெற்கின் நலன்களை மேம்படுத்தியதற்காகவும் பிரதமருக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

வர்த்தகம் மற்றும் முதலீடு, பாதுகாப்பு, விவசாயம், சிறுதானியங்கள், நிதி தொழில்நுட்பம் மற்றும் திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தை நடத்தினர்.

**புது தில்லி**
**செப்டம்பர் 10, 2023**